**தலைப்பு 286 - காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 286 - காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 28 ஆம் திகதி காணி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 416.82 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 412.23 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 4.59 மில்லியன் அதாவது 1.11 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 341.46 | 339.57 | 1.89 | 0.55 |
| மூலதனம் | 75.36 | 72.66 | 2.70 | 3.58 |
| **மொத்தம்** | **416.82** | **412.23** | **4.59** | **1.11** |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 20.02.01.03 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீட்டிற்காக ரூபா 45.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ரூபா 19.19 மில்லியனால் அல்லது 42.64 சதவீதத்தை மிஞ்சி ரூபா 64.19 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 16.00 | 15.85 | 14.00 | 15.42 | 60.00 | 52.97 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 7002/0000/00/0042/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 10.03 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ் வருகின்ற 03 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 70.31 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0068/000 | 1.67 |
| 6000/0000/00/0016/0020/000 | 68.59 |
| 6000/0000/00/0018/0025/000 | 0.05 |
| **மொத்தம்** | **70.31** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 மூலதன விடயங்களிற்காக மிகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதனால் ஏற்பாடுகளின் மீதியை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் 20 சதவீதம் தொடக்கம் 29 சதவீதம் வரையிலாகும்.

(ஆ) 2015 திசெம்பர் 29 இன் 07/2015 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம், எரிபொருளிற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து 15 சதவீத கட்டாய சேமிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இருந்த போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காது, மேற்குறிப்பிடப்பட்ட செலவின் விடயங்களிற்கான குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டால் ரூபா 1,081,103 ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக தகைமை பெறாத அலுவலகர்களிற்காக வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், குழு போக்குவரத்து வசதிகளுக்கு தகுதியில்லாத அலுவலர்களுக்காக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய குழு போக்குவரத்து வசதிகள் நாளாந்தம் 100 கிலோமீற்றர் மிஞ்சி வழங்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் 1.3 ஆம் பந்திக்கு முரணாக திணைக்களத்தில் உதவி காணி பணிப்பாளர்கள் தரம் III ஆக வேலைக்கமர்த்தப்பட்ட 14 அலுவலர்களுக்காக குழு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காகவும் பிரதம காணிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பதிலீட்டு காலம் முடிவடைந்ததுமான மூன்று அலுவலர்கள் உள்ளடக்கிய 17 அலுவலர்களுக்கு குழு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காகவும் 2016 சனவரியிலிருந்து ஒக்தோபர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 614,033 தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் எரிபொருளிற்காக மேற்கொள்ளப்பட்ட மதிப்பிடப்பட்ட ஏற்பாடாக குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடினூடாக வழங்கப்பட்ட மேலதிக ஏற்பாடுகள் ஏற்கனவே மிஞ்சியிருந்தது.

### 3.2 வருமானக் கணக்கு

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீடுகளின் வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கை பந்தி 3 இன் பிரகாரம், வருமானத்தை எதிர்கொள்ளல் மதிப்பீடுகளை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிலுவை வருமானம் ரூபா 23,419,394 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் நிலுவை வருமானம் ரூபா 22,341,669 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 4.82 சதவீதத்தால் நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் போது அதிகரித்திருந்தது. மேலும் 03 வருடங்களை விஞ்சிய நிலுவை வருமானம் ரூபா 4,772,202 ஆக இருந்ததுடன் 1 வருடம் முதல் 2 வருடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்படுகின்ற நிலுவை வருமானம் ரூபா 13,732,354 ஆக இருந்தது. வருமான நிலுவைகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை மந்தமான நிலையிலிருனந்தது.

(இ) பிரதம காணி பணிப்பாளரின் அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வருமான நிலுவைகளின் அறிக்கைகளிற்கிடையில் வேறுபாடுகள் வெளிப்படுத்தியிருந்த போதிலும், வருமான நிலுவைகளின் அறிக்கைகள் வருமானக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய வித்தியாசங்கள் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 5,147,652 தொகையான வித்தியாசங்கள் 05 பிரதேச செயலகங்களுடன் தொடர்பான வருமான நிலுவைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் வருமான நிலுவைகள் வருமான கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) அரச காணிகள் தொடர்பாக தகவல் முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 19,957,603 தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2017 யூன் 28 இல் உள்ளவாறு உள்ளக மாகாண வரி தொடர்பாக அத்தகைய தரவு முறைமையூடாக எந்தவொரு தகவலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், வரி வருமான நிலுவைகள் அமைவதற்கான இலக்கு 75 சதவீதமாதவிருந்தது. இருந்த போதிலும், 2016 சனவரி 01 இல் நிலுவையாகவிருந்த வருமான நிலுவை மீளாய்வாண்டில் 17 சதவீதம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

28601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையைக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,048,762 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 1 வருடம் முதல் 28 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு தவறியிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்குகள்

4 முதல் 7 வருடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 66,210,414 கூட்டுமொத்தப் பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை உரிய காலப்பகுதியின் இறுதியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

திணைக்களத்திற்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் மற்றும் ஏனைய 02 வாகனங்கள் முறையே 02 வருடங்கள் மற்றும் 10 மாதங்கள் காலப்பகுதிக்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களங்களின் அனைத்து திணைக்களங்கள் மற்றும் கிளைகளிலுள்ள பொருட்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும், அம்பாறை பிரதம காணி பணிப்பாளரின் அலுவலகங்களின் 16 உப அலுவலகங்களின் பொருட்களுடன் தொடர்பான பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்காததுடன் அதற்கான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

காணி அமைச்சின் பயன்பாட்டிற்காக ஒரு வருடத்திற்கு வாகனமொன்றையும் மற்றும் 06 மாதங்கள் காலப்பகுதிக்கு இன்னொரு வாகனமொன்றையும் முறையற்ற விதத்தில் திணைக்களம் வழங்கியிருந்தது.

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துதல்**

நில அளவைத் திணைக்களத்திற்குரிய ஒரு வாகனம் 02 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகவும், காணி அமைச்சிற்குரிய 2 மற்றும் 7 வாகனங்கள் 2 வருடம் முதல் 8 வருடம் வரையான காலமாகவும் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையாகக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் தீர்க்கப்படாது வருடமொன்றிற்கு குறைவான காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,739,804 மில்லியன் பொறுப்புக்கள் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 83,066 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 2,347,232 விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.7 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத முக்கிய செயற்பாடுகள்**

மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளில் போதியளவில் நிறைவேற்றப்படாத நடவடிக்கைகளின் விடயங்கள் பினவருமாறு தரப்படுகின்றன.

(i) விமசவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்கல், சான்றிதழ்களை வழங்குதல், ரன்விம சான்றிதழ்களை வழங்கல், ரிறி படைகள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு கட்டளைகள் வழங்குதல் சுனாமி சான்றிதழ்களை வழங்கல், முதலீட்டு செயற்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளிற்காக காணிகளை வழங்குதல் அதற்கான

இலக்குகள் நிலமையுடன் ஒப்பிடும் போது 10 சதவீதம் தொடக்கம் 54 சதவீதம் வரையிலான வீச்சிலிருந்தது.

(ii) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், முறைமையினூடாக 1,000,000 காணி நிலத்துண்டுகள் விடயங்களை சேகரித்து உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. முறைமையினுள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காணித் துண்டுகளின் விடயங்களின் உள்ளடக்கம் 498,622 நிலத்துண்டுகள் அல்லது 50 சதவீதத்திற்கு அருகிலிருந்ததுடன் அதற்கான நிதிசார் செயன்முன்னேற்றம் 99 சதவீதமாகவிருந்தது.

(iii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட நிலைமையை அடைவதற்கு முழுமையாக தவறிய செயற்திட்ட விடயங்கள் பின்வருமாறு.

| **நடவடிக்கை** | **அடைவதற்கு தவறிய இலக்கிடப்பட்ட நிலைமை** |
|---|---|
| மானிய சான்றிதழ் காணிகளுக்கான இலவச உறுதிகளை வழங்கல் | 450,000 (உறுதிகள்) |
| காணிகளை வழங்குவதற்கான விஷேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மானிய சான்றிதழ்களை வழங்கல் | 260 (மானிய சான்றிதழ்கள்) |
| முதலீட்டு செயற்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளிற்கான பொருத்தமான காணிகளை இனங்காணல் | 5000 (ஏக்கர்கள்) |
| அரச காணிகளின் அங்கீகாரமளிக்கப்படாத மீட்சியை கட்டுப்படுத்தல் | 500 (நிலத்துண்டுகள்) |
| குத்தகை கட்டணங்களை செலுத்தாத குத்தகையாளர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு குத்தகையாளர்களை இனங்காணல் | 20 (குத்தகையாளர்கள்) |
| குத்தகைகள் / இரத்துச் செய்தல் | 40 (குத்தகைகள் / அனுமதிப்பத்திரங்கள்) |

## (ஆ) செய்யவேண்டிய இலக்குகளை தீர்மானித்தல்

செயலாற்றல் தொடர்பான இலக்குகளை தீர்மானிக்கையில் முன்னைய ஆண்டுகளில் அமைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் நிறுவனத்தின் சாத்திய வளம் போன்ற விடயங்களுடன் கவனஞ் செலுத்துகின்ற உரிய இலக்குகள் தீர்மானிக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும், குத்தகை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதுடன் பின்வரும் விடயங்களின் இலக்கிடப்பட்ட எல்லை மற்றும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட மானிய சான்றிதழ்களை வழங்குதல் முறையே 151 சதவீதம், 270 சதவீதம் மற்றும் 128 சதவீதமாகவிருந்தது. பின்வருமாறு விபரங்கள் உள்ளன.

| | நடவடிக்கை | இலக்கு | மொத்த செயன்முன்னேற்றம் | முன்னைய ஆண்டின் போது அடையப்பட்ட எல்லை | எல்லைகள் சதவீதமாக செயன்முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| (i) | அரச காணி கட்டளை சட்டத்தின் கீழ் காணிகளின் உரிமையாளர்களுக்கு முறையாக கையளித்தல் | 2000 குத்தகைகள் | 3,023 குத்தகைகள் | 3,509 குத்தகைகள் | 151 குத்தகைகள் |
| (ii) | நீண்டகால அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | 1800 அகுமதிப்பத்திரங்கள் | 4,863 அனுமதி பத்திரங்கள் | 4,290 அனுமதிப் பத்திரங்கள் | 270 அனுமதிப்பத்திரங்கள் |
| (iii) | நல்ல காணிகளுக்கு மானிய சான்றிதழ்களை வழங்கல் | 40 மானிய சான்றிதழ்கள் | 51 மானிய சான்றிதழ்கள் | 62 மானிய சான்றிதழ்கள் | 128 மானிய சான்றிதழ்கள் |

## 3.8 அதிகாரமில்லாத கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்களின் மீதான தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் அதிகாரமின்றிக் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

(அ) காணி ஆணையாளர் (சட்டம்) பதவிக்காக மேற்கொள்ளப்பட்ட பதிலிட்டு நியமனம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொது சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் அமைச்சின் செயலாளர் 2014 யூன் 20 இலிருந்த பதிலீட்டு அடிப்படையில் காணி ஆணையாளர் பதவிக்காக திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தரை நியமித்திருந்ததுடன் 2016 சனவரி 13 இலிருந்து முழு நேர அடிப்படையாக (சட்டம்) காணி பணிப்பாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தொடர்ந்து நியமிக்கப்பட்டிருந்தார்.

(ii) எனினும், காணி ஆணையாளர் (சட்டம்) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை 2017 யூலை 01 வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை அதற்கு பதிலாக 2014 யூலை 14 இலிருந்து பதவிக்கு தகுதியிலுள்ள அலுவலக வாகனமாக சட்ட உதவியாளருக்கு வாகனமொன்ற வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு 140 லீற்றர் டீசல் வழங்கப்பட்டிருநததுடன் மாதமொன்றிற்கு ரூபா 13,300 எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2016 யூலை 01 இல் சட்ட அலுவலா ஓய்வு பெற்ற அதே நேரம் ஒதுக்கப்பட்ட வாகனமானது ஓய்வுதியத்திற்கு பின்னர் ஒரு மாதகாலப்பகுதிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) 09/2007ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளில் 2016 யூலை 01 இலிருந்து 6 மாதங்கள் காலப்பகுதிக்காக ஓய்வூதியத்திற்கு பின்னர் இந்த உத்தியோகத்தர்களிற்காக ஒப்பந்த அடிப்படையில் சட்ட அலுவலர் பதவியில் வேலைக்கமரத்துவதற்கு பொது சேவைகள்

ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக திணைக்கள தலைவரின் பரிந்துரை 2016 யூலையிலிருந்து அலுவலகத்துக்கு கேகாலை வதிவிடத்திலிருந்து நாளாந்த போக்குவரத்திற்காக வாகனத் தொகுதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒப்பந்த காலப்பகுதியின்போது வதிவிடத்திலிருந்து வதிவிடம் வரைக்கான போக்குவரத்துக்காக ரூபா 96,552 தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ முறைக்கான காணிகள் தொடர்பான தகவல்களை பதிவு செய்வதற்கான பட்டறைகளிற்காக பங்குபற்றிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளிவாரி வள நபர்களுக்கு மாத்திரம் செலுத்த வேண்டிய வள நபர்கள் படிகளை செலுத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் திணைக்கள உள்ளக அலுவலர்களால் கடமை நேர மணித்தியாலங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி பாடநெறிகளின் பங்கு பற்றலிற்காக 2016 ஆம் ஆண்டில் இரண்டு உத்தியோகத்தர்களிற்காக ரூபா 82,900 தொகையின் வளவாளர் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.9 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்கத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ளாமல் கொமறகடவல பிரதேச செயலகப் பிரதேசத்தில் 0.1352 ஹெக்டேயர்கள், 20 பேர்சஸ் மற்றும் 10 பேர்சஸ் இல் 03 நிலைமாற்றி கோபுரங்கள் 03 நிறுவங்களால் 2005,2008 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனத்திடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய அரச மற்றும் வரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு பிரதேச செயலகங்களிலும் அரச காணிகள் அங்கீகாரமில்லாத சுவிகரிப்பு மற்றும் சுவீகரிப்பு தொடர்பில் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதற்கான முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கு 15 ஆண்டுகளுக்கு முன்னர் வாகனமொன்றிற்கு ஏற்பட்ட விபத்தினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கே புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

காணி தகவல் முறைமையினுள் தகவல்களை பதிவு செய்வதற்காக உத்தியோகத்தர்களிற்கு பயிற்சி வழங்கும் நடவடிக்கை திணைக்களத்தால் மேற்கொள்ளப்படாதிருந்தது. இந்த பயிற்சி நடவடிக்கைக்காக கணனி ஆய்வுகூடளாராக இரத்மலானையில் இருந்த உலக உணவு களஞ்சியங்கள் உருவாக்குவதற்கான வேலை 2015 திசெம்பர் இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது எனினும் 2016 ஆம் ஆண்டில் ஏனைய 09 மாதங்கள் காலப்பகுதிக்கு மேலதிகமாக பயிற்சி நடவடிக்கைகளை நடாத்துவதற்கும் மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கும் ஏற்ற விகித்தில் கட்டிடங்கள் மீளசீரமைப்பு நடைபெற்றது. மீளாய்வாண்டுடன் தொடர்புடைய பயிற்சி பாடநெறிகளின் நடவடிக்கைகள் அந்த கட்டிடத்தில் மேற்கொள்ள முடியாதிருந்தமையால், வேறொரு கட்டிட நிலையமொன்று வாடகையில் பெறப்பட்டிருந்தது. அதற்காக திணைக்களத்தால் ரூபா 3.84 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணனி ஆய்வுகூடங்களாக உணவு களஞ்சியங்களை உருவாக்குவதற்கான விலை மனு கோரப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஐந்து விலைமனுதாரர்கள் விலைமனுக்களை வழங்கியிருந்ததுடன் ரூபா 2,594,890 தொகையில் குறைந்த மனுக்கு ஒப்பந்தம்

வழங்கப்பட்டிருந்தது. விலைமனுவினது இரண்டு தடவையில் கணனி ஆய்வு கூடத்தை சீரமைப்பதற்கும் மலசலகூட முறையை நிர்மாணிப்பதற்குமாக கோரப்பட்டிருந்ததுடன் இரண்டு ஒப்பந்தங்களும் முறையே ரூபா 1,659,340 மற்றும் 2,018,833 தொகைகளுக்கான அதே ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உணவு களஞ்சியங்களை கணனி ஆய்வு கூடத்திற்கு மாற்றுவதற்கு ஒட்டுமொத்தமாக ஒரு ஒப்பந்தமாக கருதுவதன் மூலம் விலைமனு கோரப்படாமையிலும் ஒப்பந்த கிரயத்கை குறைப்பது தொடர்பான சந்தர்ப்பம் மீது திணைக்களம் கவனஞ்செலுத்தியிருக்கவில்லை.

(ii) ரூபா 71,500 தொகையான மேலதிக மதிப்பீடுகளானது ஆரம்பத்தில் இனங்காணப்பட்டதும் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டதுமான மலசலகூட முறைமைக்காக நீர்த்தொட்டியை பொருத்துவதற்கும் இலக்குகளை நிர்மாணிப்பதற்குமாக அங்கீகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டது.

(iii) கணனி ஆய்வுகூடத்தின் 3 வளிப்பதனாக்கிகளானது தனியான வேகத்துடனான இலத்திரனியல் இணைப்புடன் செயற்படுத்த முடிந்திருக்கவில்லையென மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு முன்னர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ரூபா 258,235 தொகையான மேலதிக மதிப்பீடானது உரிய வேலை ஆரம்பிப்பத்தன் பின்னர் தயாரிக்கப்பட்டதுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் சிபாரிசு இல்லாமல் Split type 60000 BTU இன் 03 வளிப் பதனாக்கிகளிற்கு பதிலாக Split type 24000 BTU இன் 07 வளிப்பதனாக்கிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(iv) அலுமினியத்தை பயன்படுத்தி அறைகளை தனிப்படுத்துவது தொடர்பில் முன்னைய திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ரூபா 147,825 தொகையான மேலதிக செலவீனம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

(v) நிர்மாண பயிற்சி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவகத்தின் SBD1 தரத்திலும் குறைவாக ஒப்பந்தகாரர்களுடன் ஈடுபட்ட உடன்படிக்கையில் ஒரு நாளிற்கான தாமதக்கட்டணங்களாக காட்டப்பட்டிருந்தது. ஆனால் ரூபா 51,749 தொகையான தாமதக்கட்டணங்கள் குறைவாக அறவிடப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் இல் ரூபா 1,558,440 தொகையான 15 அச்சில் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டது. அதில் 09 கருவிகள் 2016 ஆகஸ்ட் 15 அளவில் உரிய தொகையை இனங்காண்பதன் மூலம் உரிய பிரிவுகளுக்கு வழங்காமல் விளைவற்றிருந்தது.

(இ) கணனி ஆய்வுகூடத்தின் தேவைப்பாடுகளிற்காக 2015 திசெம்பர் கொள்வனவு செய்யப்பட்ட 98 யூபிஎஸ் இல் 2016 ஒக்டோபர் 07 இல் உள்ளவாறு 48 யூபிஎஸ் விநியோகித்து இரத்மலானை கணனி ஆய்வுகூடத்திற்காக ரூபா 215,200 பெறுமதியான 50 யூபிஎஸ் மீதிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கணனி பயிற்சி நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஒக்டோபர் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,556,100 பெறுமதியான 43 கணனிகள் 2016 ஆகஸ்ட் 15 இலும் களஞ்சியத்தில் விளைவற்றிருந்தது. ஆய்வுகூடத்தின் வேலை 2017 யூன் 30 இலும் தொடங்கப்பட்டிருக்காமையால் கணனி ஆய்வுகூடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கணனியின் உத்தரவாத காலம் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 நவம்பர் இல் கொள்வனவு செய்யப்பட்ட 45 கணனிகளில் 30 கணனிகள் மீதமாகமிருந்தமையால் ஏனைய 34 கணனிகள் 2016 யூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்டது. ரூபா 779,338 பெறுமதியான இத்தகைய 64 கணனிகள் கணனி ஆய்வுகூடத்தின் வேலை ஆரம்பிக்காமையால் 2016 திசெம்பர் 31 அளவிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 திசெம்பர் இல் கொள்வனவு செய்யப்பட்ட 54 கணனி கதிரைகளில் 31 கதிரைகள் பயன்படுத்தப்பட்டிருக்காத போதிலும் ஏனைய 56 கதிரைகள் 2016 ஏப்ரல் இல் கொள்வனவு செய்யப்பட்டது. இரண்டு சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 670,665 பெறுமதியான 87 கதிரைகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தாமல் இருந்தது.

**3.11 முகாமைத்துவ பலவீனங்கள்**

---

கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களின் உடன்படிக்கைக்கான காணிகளின் அடையாளமானது காணிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. காணி உரிமையை கையளிக்கும் திகதியிலிருந்து மதிப்பீட்டு பெறுமதியில் செலுத்த வேண்டிய குத்தகை வாடகை காணி பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்கள் மீது முதலீட்டாளர்களுக்கு அறிவிக்க வேண்டும். 5 வருடங்கள் தொடக்கம் 9 வருடங்கள் வீச்சிலான காலப்பகுததியானது காணியின் கையளித்த திகதியிலிருந்து குத்தகை வாடகைக்கு செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் 6 நிறுவனங்களிற்கு அறிவிக்கப்பட்டது.

(ஆ) இரத்மலானை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான அரச காணிகளை முதலீட்டாளர்களுக்கு நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விடுதலானது 1999 ஆம் ஆண்டில் திணைக்களத்தால் தொடங்கப்பட்ட 02 கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டது. 2013 திசெம்பர் 13 ஆம் திகதிய 2013/08 ஆம் இலக்க திணைக்கள உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம், 2011 யூன் 01 வரை கைத்தொழில் நகரங்கள் மற்றும் கைத்தொழில் பூங்கா முதலீட்டாளர்களால் செலுத்தாமல் நிலுவையாகவுள்ள குத்தகை கட்டணத்தின் நிலுவைகள் அத்தகைய முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக திணைக்களத்தால் குறைக்கப்பட்டது. அதற்காக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது தெரிவு செய்யப்பட்ட 11 முதலீட்டாளர்களின் 2011 யூன் 01 இலிருந்து 2016 திசெம்பர் 31 வரையிலான குத்தகை வாடகை நிலுவைகள் ரூபா 39,907,658 தொகையாகும். மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அத்தகைய குத்தகை வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரத்மலானை கைத்தொழில் நகரத்தின் முதலீட்டாளர்களிற்கு கொடுக்கப்பட்ட காணிகளிலுள்ள கிரேன் மற்றும் தொடர்புடைய உபகரணங்களுடனான 2 கட்டிடங்கள் மற்றும் இன்னொரு கட்டிடமொன்றிருந்தது. அவைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 21,584,802 ஆகும். காணி கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து 10 வருடங்கள் தொடக்கம் 17 வருடங்கள் வரையிலான காலப்பகுதி கடந்திருந்த போதிலும் உரிய வாடகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திம்பிரிகசாய பிரதேச செயலக பிரிவிலுள்ள 2.503 ஹெக்டேயர் பரப்பளவுள்ள அரச காணியில் அரச கூட்டுத்தாபனம ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மேல்மாகாண சபையின் அமைச்சரவை 2011 திசெம்பர் 21 இல் காணிகளிற்கான சட்ட உரிமையாண்மையை கொடுப்பதற்காக 30 வருடங்கள் காலப்பகுதிக்கான வாடகைகளை அறவிடுவதற்கு தீர்மானித்தது. அரச காணி கட்டளை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான மொத்த குத்தகை கட்டணம் ரூபா 1,019.20

மில்லியன் தொகையானதுடன் திணைக்களத்தால் அத்தகைய வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.12 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 53 | 38 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 38 | 09 | 29 |
| (iii) | இரண்டாம் நிலை | 674 | 390 | 284 |
| (iv) | ஆரம்ப நிலை | 140 | 110 | 30 |
| | **மொத்தம்** | **905** | **547** | **358** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தின் சமூகவியலாளர் பதவி தொடர்பிலான வேலையின் விபரம் தொடர்பில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கான வசதிகள், மனித இணைப்புகளை விஞ்ஞானரீதியாக திட்டமிடல் வழங்குவதற்குமான கடமைகள், ஹைலான்ட்ஸ் அபிவிருத்தி செயற்திட்டத்துடன் தொடர்புடைய பின்தொடர் நடவடிக்கையை எடுத்தல், சமூக பொருளாதார அளவைகளை நடாத்துவதன் மூலம் அறிக்கையிடல் மற்றும் பிரச்சனைகளை தீர்த்தல் போன்ற கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இருந்தபோதிலும், இந்தப்பதவியுடன் தொடர்புடைய எந்தவொரு நடவடிக்கையும் தற்காலிகமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, சமூகவியலாளரின் பதவியை உருவாக்குவதனூடாக எதிர்பார்க்கப்பட்ட பிரதான நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.